திரைப்பட அரங்குகள்

*62. வினா—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

Semi Permanent Theatre...... கள் துவக்குவதற்கு எங்கெங்கு அரசு அனுமதி கொடுத்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: விவர அறிக்கை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பி. எஸ். மணியன்: ஸெமி-பர்மனென்ட் தியேட்டர்கள் நடத்துவதற்கு எத்தனை ஆண்டுகள் தொடர்ந்து அனுமதி தரப்படுகிறது, அரசு சார்பில் தரப்படக்கூடிய கடன் தொகை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்தத் தியேட்டர்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத காலத்திற்கு உரிமம் வழங்கப்படுகிறது. ஐந்து ஆண்டுகளுக்குக் குறைவாக தங்கள் விருப்பம்போல் வரையறை செய்ய அவர்களுக்கு அதிகாரம் எதுவும் தரப்படவில்லை. இதற்கு லட்ச ரூபாய் அளவு கடன் தரப்படுகிறது.

Permission for manufacture of liquor

*63. *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to permit manufacture of liquor in private sector; and

(*b*) if so, details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (ஆ) இந்தியாவில் அந்நிய மது வகைகளைத் தயாரிப்பதற்காக தொழிற்சாலைகள் அமைப்பதற்கு சவுத் இந்தியா கார்ப்பரேஷன் (ஏஜன்ஸீஸ்) லிமிடெட், சென்னை. அருணா சுகர்ஸ், சென்னை, வோரியன் இண்டஸ்ட்ரீஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட், சென்னை, ஆகியவைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன. வடிசாலைகள் (ப்ரூவரீஸ்) தொடங்குவதற்கு எம்,எஸ்.எம். சுல்தான் மரக்காயர் அண்டு சன்ஸ், சென்னை. கோத்தாரி அண்டு சன்ஸ், சென்னை, நேஷனல் கம்பெனி, சென்னை, ஆகியவற்றிற்கும் திருவாளர்கள் ஏ. எல். சீனிவாசன், சென்னை, கே. ஆர். நடராசன், பொள்ளாச்சி, ஆகியோருக்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

THIRU N. DENNIS: May I know whether the Government will come forward to start such liquor production in the co-operative sector?

இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1972 சனவரி 28]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படியொன்றும் இப்பொழுது உத்தேசம் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : 'அன்னிய மது வகை' என்பதில் 'ஒயினும்' சேரும் என்று நினைக்கிறேன். மதுரை மாவட்டத்தில் திராட்சை அதிகமாக உற்பத்தியாகும் பகுதியில் ஒயின் தயாரிக்கக்கூடிய தொழிற்சாலையொன்றை அமைக்க வாய்ப்பு இருப்பதால் அதற்கு அனுமதியளிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுபற்றி விண்ணப்பங்கள் வந்தால் பரிசீலிக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்த ஆலைகளில் தயாரிக்கும்பொழுது சாராயத்தின் விலை என்ன, அதை வெளியே அனுப்புகின்றபோது அதனுடைய விலை என்ன, அதை லைசன்ஸ்தாரர்கள் விற்பனை செய்கின்றபோது அதனுடைய விலை என்ன ஆகிறது என்பதை முதலமைச்சரவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இன்னும் இந்த ஆலைகளெல்லாம் தொடங்கப்படவில்லை. அதற்குப் பிறகுதான் அதனுடைய விலைகளெல்லாம் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கூட்டுறவுத் துறையில் இம் மாதிரி விண்ணப்பங்கள் வந்தால் அவற்றை அனுதாபத்துடன் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கூட்டுறவுத் துறையில் இதுபோன்ற தொழிற்சாலையை ஆரம்பிக்கின்ற உத்தேசம் இப்பொழுது அரசுக்கு இல்லை என்று நான் ஏற்கெனவே சொன்னேன்.

Quality control for toddy, etc.

* 64. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state the details of the steps taken by the Government to have quality control for toddy and arrack in this State?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : விற்பனைக்கான அல்லது விற்பனைக்காக வைத்து வரப்படுகின்ற கள்ளும் சாராயமும் நல்ல தரமுள்ளதாகவும். கலப்படமில்லாததாகவும் இருக்கவேண்டுமெனப் பார்த்துக்கொள்ள கட்டளைகள் உள்ளன. போதை அதிகம் ஊட்டுவதற்கோ, வேறு எந்த நோக்கத்திற்கோ மதுவுடன் எந்தப் பொருளும் சேர்க்கப்படக்கூடாது. ஆய்வு அதிகாரிகள் எடுக்கும் கள் மாதிரிகள் தமிழ்நாடு ஆயத்துறை—மதுவிலக்கு ஆய்வுக் கூடத்தில் பரிசோதிக்கப்படுகின்றன.

சாராயத்தைப் பொறுத்தமட்டில், நெல்லிக்குப்பம், திருச்சி, வடிசாலைகளில்—தயாரிக்கப்படுகிற சாராய மாதிரிகள் சென்னையில் தமிழ்நாடு ஆயத்துறை—மதுவிலக்கு ஆய்வுக்கூடத்தில், இவை